IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.

OS.No.653/2009

Deposition of witness for DW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ஷோபன் குமார் | Caste | : | |
| Father Name | : | கேசவ ரெட்டி | Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 24th day of November, 2025.

வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–

1. எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியும். பி.வா.சா.ஆ.1 ஐ நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். அந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சண்முகி அம்மாளின் கணவர் பெயரில் இருக்கும் இரண்டு செட்டில்மென்ட் பத்திரமான 15.12.1961 மற்றும் 1968 ஆகிய அசல் ஆவணங்கள் என்னிடம் உள்ளதா என்றால் வீட்டில் பார்த்து தான் சொல்ல வேண்டும். மேற்படி பி.வா.சா.1 ல் எத்தனை அட்டவணை சொத்தானது கிரையமாக வாங்கப்பட்டுள்ளது என்பது எனக்கு தெரியுமா என்றால் சரியாக தெரியாது. பி.வா.சா.ஆ.1ல் எழுதப்பட்ட தேதியானது 17.08.2000 என்று சொன்னால் சரிதான்.

2. சர்வே எண்.19/1 என்ற எண்ணை தவிர அதற்கு தற்போது சர்வே எண் அல்லது புதிய சர்வே எண் என்று வேறு எந்த சர்வே எண்ணும் பி.வா.சா.ஆ.1ல் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். ஆனால் அப்பொழுது கிராம நத்தம் முழுவதும் சர்வே எண்.19/1 என்று தான் குறிப்பிடுவார்கள். மேற்படி சர்வே எண்.19/1 ஆனது எப்பொழுது உட்பிரிவானது என்பது பற்றி எனக்கு தெரியாது. 2000 ஆம் ஆண்டில் எனது தந்தை கிரைய பத்திரம் வாங்கும் போது தாவா சொத்திற்கு அதாவது சர்வே எண்.19/1 ஆனது உட்பிரிவு செய்யப்பட்டு பி.வா.சா.ஆ.1ல் அது குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் அது தவறு தான் என்று

சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது.

3. வா.சா.ஆ.12 ஆனது சர்வே எண்.19/65 –ற்கு 21.08.1990 அன்று வழங்கப்பட்ட பட்டா என்று சொன்னால் சாட்சி வழக்கறிஞர் கேட்கும் போது சரி என்று கூறினார் என்று வழக்கறிஞர் சொன்ன பிறகு நீதிமன்றம் அந்த கேள்வியை திரும்ப கேட்ட பிறகு ஆவணத்தை பற்றி தெரியவில்லை அதை உரிய அலுவலகத்தில் தான் கேட்க வேண்டும். சர்வே எண்.19/1 எந்த தேதியில் உட்பிரிவு செய்யப்பட்டது என்று தெரிந்த கொள்ள நான் நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. வெங்கட் ரெட்டியின் மகன் உமாபதி எனது தாயாரின் தந்தை என்று சொன்னால் சரிதான்.

4. வாதிகள் எனது உறவினர்கள் என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கின் 3 ஆம் வாதியின் தந்தை பெயர் கேசவரெட்டி, தாயார் பெயர் தனலட்சுமி அம்மாள் என்று சொன்னால் சரிதான். மற்றொரு உறவினர் ராமிரெட்டி மகன் சுந்தரசேகர ரெட்டி என்று சொன்னால் சரிதான். அவரை சந்திரசேகர ரெட்டி என்றும் கூப்பிடுவார்கள் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.12 ஆனது எனது தாயாரின் தந்தையான உமாபதிரெட்டி பெயரிலும், 3 ஆம் வாதியின் தாயார் தனலட்சுமி பெயரிலும், மேற்கூரிய சந்திரசேகர ரெட்டி பெயரிலும் சர்வே எண்.19/65 என்ற இடத்திற்கு பட்டா கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

5. 1990–லேயே சர்வே எண்.19/1 உட்பிரிவு செய்யப்பட்டுவிட்டது சரியான உட்பிரிவு எண் குறிப்பிடாமல் என் தந்தை வாங்கிய கிரைய பத்திரம் பி.வா.சா.ஆ.1 ஆனது செல்லாது என்று சொன்னால் சரியல்ல. 19/1 என்று போட்டதால் மட்டும் செல்லாததாகி விடாது. 10.03.1986 தேதியிட்ட உமாபதி எழுதிவைத்த உயில் சாசனம் நீதிமன்றத்தில் தாக்கல்

செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் செய்யவில்லை. மேற்கூரிய உயில் ஆவணத்தை தாக்கல் செய்தால் மட்டுமே உயில் முன்னிலைக்கு பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் எழுதிக் கொள்ள எனக்கும், 3 ஆம் பிரதிவாதிக்கும் உரிமை இருக்கிறதா என்பது தெரிய வரும் என்று சொன்னால் சரிதான். பி.வா.சா.ஆ.3 ல் வழக்கு சொத்துக்கள் மட்டுமல்லாமல் வேறு சொத்துக்களையும் சேர்த்து தான் நானும், 3 ஆம் பிரதிவாதியும் பாகப்பிரிவினை செய்து கொண்டோம் என்றால் சரிதான்.

6. பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் சர்வே எண்.19/65 க்கு மட்டும் பட்டா இணைக்கப்படவில்லை என்றால் சரிதான். ஆனால் மற்ற எண்கள் குறித்து நான் பார்க்க வேண்டும். சர்வே எண்.19/65 தவிர வேற எந்த எண்ணும் தாவா சொத்துக்கள் இல்லை என்று சொன்னால் சரிதான். பி.வா.சா.ஆ.3 ல் சர்வே எண்.19/103 ற்கு உண்டான என் பெயரிலும், 3 ஆம் பிரதிவாதி பெயரிலும் உள்ள பட்டாவை இணைத்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.3 அதாவது பட்டா என்னால் 2024– ல் தான் வாங்கப்பட்டது என்று சொன்னால் அந்த வருடத்தில் தான் வாங்கப்ட்டது. பி.வா.சா.ஆ.3 ஆவணமானது எழுதும் போது சர்வே எண்.19/65 ற்கு உண்டான பட்டா என் பெயரிலோ அல்லது 3 ஆம் பிரதிவாதி பெயரிலோ இல்லை என்று சொன்னாலும் மேற்படி பி.வா.சா.ஆ.3 ஐ எழுதிய பிறகு தான் நானும், 3 ஆம் பிரதிவாதியும் வாதிகளுக்கு தெரியாமல் பட்டாவை பெற்றுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. அதற்கு முன்பே என் பெயரிலும், என் தந்தை பெயரிலும் பட்டா இருந்தது. மேற்படி பட்டாவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

7. பி.வா.சா.ஆ.2 ஆனது கணினி பட்டா என்று சொன்னால் சரிதான். அதில் சர்வே எண்ணின் விஸ்திரனம் மற்றும் அளவுகள், மனை

அமைப்புகள் குறித்து சொல்ல முடியாது என்று சொன்னால் சரிதான். அது இந்த சொத்து மட்டுமல்ல எந்த சொத்திற்கும் சொல்ல முடியாது. மனை அளவு குறிப்பிடப்பட்டுள்ள பட்டாவை நான் பெற்றுள்ளேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் தந்தை தாக்கல் செய்துள்ள பதிலுரையை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். மேற்படி பதிலுரையில் 2 ஆம் பிரதிவாதி சண்முகி அம்மாளிடம் இருந்து 1 ஆம் பிரதிவாதி கிரையம் வாங்கிய சொத்தின் சர்வே எண்.19/65 என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. பதிலுரையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள மாதிரி வரைபடம் எந்த சர்வே எண்ணிற்கு உட்பட்ட வரைபடம் என்று சர்வே எண்ணில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் சர்வே எண் குறிப்பிடப்படவில்லை ஆனால் கதவு எண் குறிப்பிடப்பட்டுள்ளது.

8. வா.சா.ஆ.12 ல் கொடுக்கப்பட்டுள்ள மாதிரி வரைபடத்தில் தென்கிழக்கு பகுதி உள்ளவாறு தான் 1 ஆம் பிரதிவாதி தாக்கல் செய்த பதிலுரையுடன் இணைக்கப்பட்டுள்ள வரைபடத்திலும் உள்ளது என்று சொன்னால் சரிதான்.

(குறுக்கு விசாரணை வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.)

INBARANI Digitally signed by INBARANI

DISTRICT MUNSIF
KATPADI